
PDNL

# PALAYAMKOTTAI DIOCESE NEWS LETTER

Vol.52 NOVEMBER 2024 No. 02



All Saints' Day - Nov 1

All Souls' Day - Nov 2

"How shining and splendid are your gifts, O Lord
which you give us for our eternal well-being
Your glory shines radiantly in your saints.
May their prayers bring us your forgiveness and love. Amen"

## 30th Home Day Celebration – Saranalayam
04.10.2024





## Seminar on Jubilee 2025 – Tenkasi
13.10.2024






## School Building Blessing – Mylapuram
13.10.2024





Dear Rev. Fathers, Brothers, Sisters and my dear Lay faithful,

Greetings in the name of Jesus who was crucified and risen!

November is the month in which we remember our beloved dead who have gone before us. All Souls' Day is a holy day that the Catholic Church dedicates to honouring and praying for the dead. In the Roman Rite, the official name of this day is "The Commemoration of All the Faithful Departed."

The Church is composed of the faithful living upon the earth and those departed loved ones who have gone before us. The latter includes the Saints in Heaven and the faithful Souls being purified in Purgatory. Just as on 1 November, we honour those who are with God, on 2 November, we celebrate a Commemoration of All the Faithful Departed. Praying for the dead is mentioned in the book of Maccabees. This tradition has deep roots in the Old Testament. Judas Maccabees offered prayers and sacrifices for the Jewish soldiers who had died wearing pagan amulets, which were forbidden by the Law. "They turned to prayer, beseeching that the sin which had been committed might be wholly blotted out" (II Mac 12:42) and "Therefore, he (Judas Maccabees) made atonement for the dead, that they might be delivered from their sin" (12:46). It is thought to be the earliest or one of the earliest references to the existence of Purgatory. As the Book of Revelation 21:27 says of the Heavenly Jerusalem, "... nothing unclean shall enter in." The *Catechism of the Catholic Church* defines purgatory as a "purification, so as to achieve the holiness necessary to enter the joy of heaven," which is experienced by those "who die in God's grace and friendship, but still imperfectly purified" (CCC 1030).

The Church which the Mystical Body of Christ consists of three different parts: (i) The Church Militant consists of those still on earth. We are militant because we still struggle against the world and the temptations of the Devil; (ii) The Church Suffering refers to the souls in Purgatory. They have completed their earthly journey but are not yet in Heaven; and (iii) The Church Triumphant consists of those already in Heaven. The Communion of Saints is the name for the unity and cooperation between each of the three parts.

The purpose of All Souls' Day is for the living members of the Catholic Church to pray and intercede on behalf of those who have died and remain in purgatory. On this day, we honour them for their fidelity in life and pray for them since they are being purified before entering the all Holy Presence of God. The theological basis for the feast is the doctrine that the souls which, on departing from the body, are not perfectly cleansed from venial sins, or have not fully atoned for past transgressions and thus are debarred from the Beatific Vision; and that the faithful on earth can help them by prayers, especially by the sacrifice of the Mass and alms-giving. Through the prayers and intercessions of the living, the souls in purgatory can be cleansed and admitted into heaven.

As Pope St. John Paul II taught us: "The Church has always urged us to pray for the dead. She invites believers to regard the mystery of death not as the last word on human fate but as a journey toward eternal life." There are many ways to remember the deceased throughout the year, as well as various prayers that can be said for the souls who have passed away. The most powerful prayer is offering the Holy Sacrifice of the Mass for the souls in Purgatory and for all those who have died. Attending

Mass should be a fundamental part of All Souls' Day, given its significance and immense power.

There is also the St. Gertrude Prayer. Tradition has it that Our Lord told Saint Gertrude that every time the following prayer was devoutly recited, 1,000 souls (or a vast number) would be released from their suffering in Purgatory: "Eternal Father, I offer You the most precious blood of thy Divine Son, Jesus, in union with the Masses said throughout the world today, for all the Holy Souls in Purgatory, for sinners everywhere, for sinners in the universal Church, for those in my own home, and in my family." Amen.

May this prayer be recited in our homes during family prayers to honour departed loved ones who have gone before us. As we remember our beloved departed ones and express our gratitude for all they gave us, let's not forget to pray for their souls, so that they may rest in peace and see God face-to-face. May the Lord grant eternal rest unto all the faithful departed, in particular those of the diocese of Palayamkottai.

With my cordial blessings and prayers.

Yours devotedly in Our Lord,

**+ S. Antonysamy**
Bishop of Palayamkottai

**This Month Collection,**

| |
|---|
| African Missions – For Missions in Africa – 03.11.2024 |
| St. Peter the Apostle – To Support the Seminarians and Novices in Mission Countries Solemnity of Christ the King – 24.11.2024 |

**Rev.Fr. S.A. Antonysamy, Procurator**

# தமிழ்நாடு கத்தோலிக்கக் கிறிஸ்தவர்கள் குறித்த சமூகப் பொருளாதாரக் கணக்கெடுப்பு 2024-2025

ஆண்டவர் இயேசுவில் அன்பிற்கினியவர்களே!

நம் இந்தியத் திருநாட்டில் கடந்த 2011ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டது. அந்தக் கணக்கெடுப்பின் அடிப்படையிலேயே இன்றுவரை ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசுகளின் கொள்கை முடிவுகள் எடுக்கப்பட்டு வருகின்றன. பத்து ஆண்டுகளுக்கு ஒருமுறை மேற்கொள்ளப்பட்டு வந்த மக்கள் தொகை கணக்கெடுப்பு பதினான்கு ஆண்டுகளாகியும் நடைபெறவில்லை என்பது வருத்தத்திற்குரியது. அடுத்த மக்கள் தொகை கணக்கெடுப்பு எப்போது நடைபெறும் என்றும் தற்போது தெரியவில்லை. இந்நிலையில், இந்தியாவில் உள்ள கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை 2011ஆம் ஆண்டு நடத்தப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பின்படியே அளவிடப்பட்டு வருகிறது. எனவே, அரசியலில் கிறிஸ்தவர்களின் பிரதிநிதித்துவம், கல்வியிலும் வேலைவாய்ப்பிலும் கிறிஸ்தவர்களுக்கான ஒதுக்கீடுகள், கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை அடிப்படையிலான அரசின் கொள்கை உருவாக்கங்கள் எல்லாம் உண்மைக்கு மாறாக உள்ளன. இந்நிலை மாற வேண்டும் என்றால், நமது கத்தோலிக்கக் கிறிஸ்தவர்கள் குறித்த சமூகப் பொருளாதாரக் கணக்கெடுப்பினை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது. தமிழக ஆயர் பேரவையும் இதனைப் பரிந்துரைத்துள்ளது.

## நோக்கங்கள்

1. தமிழ்நாட்டில் வாழும் கத்தோலிக்கக் கிறிஸ்தவர்களின் சமூகப் பொருளாதார நிலை குறித்த விரிவான ஆய்வு மேற்கொள்ளுதல்.

2. சேகரிக்கப்பட்ட புள்ளி விவரங்களின் அடிப்படையில் தமிழ்நாடு கத்தோலிக்க ஆயர் பேரவை தமிழகக் கத்தோலிக்கக் கிறிஸ்தவர்களுக்கான செயல்பாட்டுத் திட்டங்களை மேற்கொள்ளுதல்.

## கணக்கெடுப்பு நடத்துவதற்கான சில பரிந்துரைகள்

1. நமது மறைமாவட்டத்தின் இளைஞர் பணிக்குழு செயலர் அருள்பணி. அ. இம்மானுவேல் பிரான்சிஸ் ராஜ் அவர்கள் மறைமாவட்டப் பங்குகளின் தரவுகளைச் சேகரிக்கும் மறைமாவட்ட ஒருங்கிணைப்பாளராகச் (Data Coordinator) செயல்படுவார்.

2. மறைவட்ட அதிபர்கள் தங்கள் மறைவட்டப் பங்குகளின் தரவுகளைச் சேகரிக்க, ஒவ்வொரு பங்குத்தந்தையோடும் கலந்து ஆலோசித்து, பங்கு அளவில் ஒரு புள்ளி விவர ஒருங்கிணைப்பாளரைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

3. மறைவட்ட அதிபர்கள் தங்கள் மறைவட்டப் பங்குத்தந்தைகளோடும், பங்கு புள்ளி விவர ஒருங்கிணைப்பாளர்களோடும் கலந்து பேசி, பங்கு அளவில் துடிப்புமிக்க ஆன்ட்ராய்டு (Android) செயலிகளை அறிந்த தரவுகள் சேகரிக்கும் குழுவை உருவாக்க வேண்டும்.

4. மறைவட்ட அளவில் பங்குகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட தரவுகள் சேகரிக்கும் குழுக்களுக்குப் புள்ளி விவரச் சேகரிப்புக்காக ஏற்பாடு செய்யும் பயிற்சிகளை மறைவட்ட அதிபர் ஒருங்கிணைப்பார்.

5. தரவுகள் சேகரிக்கும் பணிக்குப் பங்குத்தந்தையர் சிறப்புக் கவனம் செலுத்தி, ஒத்துழைப்பு கொடுக்க அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

## புள்ளி விவரச் சேகரிப்புப் பணிக்கான காலக்கெடு

1. மறைவட்ட அளவில் புள்ளி விவரச் சேகரிப்புக்கான பயிற்சிகளானது கீழ்க்கண்ட தேதிகளில் நடைபெற்று வருகின்றன.

| | | |
|---|---|---|
| தென்காசி மறைவட்டம் | - | 20.10.2024 |
| அம்பாசமுத்திரம் மறைவட்டம் | - | 27.10.2024 |
| சங்கரன்கோவில் மறைவட்டம் | - | 03.11.2024 (காலை) |
| கோவில்பட்டி மறைவட்டம் | - | 03.11.2024 (மதியம்) |
| பாளையங்கோட்டை மறைவட்டம் | - | 10.11.2024 (காலை) |

2. புள்ளி விவரச் சேகரிப்புப் பணி நவம்பர் 2024 முதல் மார்ச் 2025 வரை நடைபெறும்.
3. சேகரிக்கப்பட்ட புள்ளி விவரங்கள் குறித்த சரிபார்த்தலும், பகுப்பாய்வும் ஏப்ரல் 2025 முதல் மே 2025 வரை நடைபெறும்
4. புள்ளி விவர வரைவு ஜுன் 2025இல் சமர்ப்பிக்கப்படும்.
5. முழு புள்ளிவிவரம் அடங்கிய தொகுப்பு அறிக்கை ஜுலை 2025இல் தமிழகக் கத்தோலிக்கக் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை மற்றும் சமூகப் பொருளாதார நிலை குறித்த உண்மையான புள்ளி விவரங்களை அரசிடம் சமர்ப்பிக்கவும், அதன் மூலம் அரசின் கொள்கை முடிவுகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்களைக் கொண்டு வரவும் தமிழக ஆயர் பேரவை முன்னெடுக்கும் இம்முயற்சி வெற்றி பெற நாம் அனைவரும் ஒத்துழைப்போம். எல்லாம் வல்ல இறைவனின் அருளும் ஆசிரும் உங்களோடு இருப்பதாக!

நம் ஆண்டவர் இயேசுவில் அர்ப்பணத்துடன்,

✠ ச. அந்தோனிசாமி
பாளையங்கோட்டை மறைமாவட்ட ஆயர்

குறிப்பு: இச்சுற்றுமடல் 10.11.2024 ஞாயிறு திருப்பலியின்போது அனைத்து ஆலயங்களிலும் வாசிக்கப்பட வேண்டும்.

## BISHOP'S ENGAGEMENTS

**November - 2024**

| Date | Time | Programme |
|---|---|---|
| 02.11.2024 | 05.30 p.m. | Cemetery Blessing |
| | 06.30 p.m. | Mass, St. Antony's Shrine, Palay Market |
| 03.11.2024 | | Pastoral Visit, Alavanthankulam |
| 05.11.2024 - 06.11.2024 | | TNBC Family Commission Meeting, Trichy |
| 07.11.2024 | | Clergy Monthly Recollection, St. Antony's Shrine, Palay Market |
| 09.11.2024 - 10.11.2024 | | Pastoral Visit, Karuthapillaiyur |
| 12.11.2024 | 11.45 a.m. | Mass, Puliampatti |
| 13.11.2024 | | Mid - Year Board Meeting, St.Paul's Seminary, Trichy |
| 14.11.2024 - 21.11.2024 | | Congress on "Divine Mercy and Mary - Our Hope", Vincouver, Canada |
| 22.11.2024 | | Governing Body Meeting of St.Joseph's Colleges, Bishop's House |
| 23.11.2024 | 07.00 a.m. | Mass and Presbytery Blessing, Chidambarapuram |
| | 11.00 a.m. | Presbytery Blessing, Sivagiri |
| | 05.30 p.m. | Pastoral Visit, Pavoorchatram |
| 24.11.2024 | | Pastoral Visit, Pavoorchatram |
| 29.11.2024 | 10.00 a.m. | School Centenary Celebration, Vaikalipatti |
| 30.11.2024 | 12.00 noon | Mass, Kamanayakkanpatti |
| | 07.00 p.m. | Feast Mass, Vandanam |

***Secretary to the Bishop***

***Cell No. 9488534455***

## FROM VICAR GENERAL'S DESK

### Announcements

Dear Brother Priests,

The monthly recollection for November will be held on 7th November at St. Antony's Diocesan Shrine, Sivalaperi Road, Palayamkottai. Kindly take note that the whole programme will be held there as per the schedule given below:

| | | |
|---|---|---|
| 09.30 A.M | : | Registration |
| 10.00 A.M | : | Adoration of BL. Sacrament and Confession |
| 11.00 A.M | : | Information |
| | | Coffee Break |
| 12.00 Noon | : | Requiem Mass & Blessing of the Cemeteries of the Clergy |
| 01.00 P.M | : | Lunch |

- - - - - - - - - - - - - -



Our heartfelet condolences to Fr. Jacob Amala Preenith K. and to his family members on the demise of his mother Mrs. Carolin Kulandairaj on 8th of October. We pray the Lord may give her Eternal Bliss and console the family members.

Yours devotedly in Christ,

**Rev. Fr. G. Kulandairaj**

Vicar General

# ANNIVERSARIES

## BIRTHDAYS

03/11/ Fr. I. Arockiaraj

05/11/ Fr. S. Francis Xavier




06/11/ Fr. C.P. Michaelraj

06/11/ Fr. James V. SVD

09/11/ Fr. P. Alphonse Paulraj

11/11/ Fr. K. Jacob Amala Preenith

14/11/ Fr. F. Leo Jerold

15/11/ Fr. Joseph S. OFM (Cap)

16/11/ Fr. E. Xavier Sahaya Suresh

18/11/ Fr. D. Xavier Devasagayam

18/11/ Fr. Santiagu P. O Praem

21/11/ Fr. Michael Prakasam

21/11/ Fr. Christhu Raja L.

27/11/ Fr. Jamels James

Dear Fathers, with great joy we wish you ‘Happy Birthday’. May God shower His Grace upon you! MANY MORE HAPPY RETURNS OF THE DAY!

## FEAST DAYS




01/11/ All Saints Day

04/11/ Feast of St. Charles Borromeo

Fr. M. Charles

Sisters of Charles Borromeo, Puliyampatti

21/11/ Christ the King

Fr. Devarajan

Fr. M.P.Jesuraj

Fr. F.X. Rajesh

Fr. Vedharaj MSFS

Dear Fathers and Sisters, we wish you "HAPPY FEAST"! We pray that your hearts be filled with His Love and Grace. May the Lord continue to bless you in your ministry through the intercession of your Patron Saints.

## NECROLOGY

02/ 11 / 2011 All souls day

Dear fathers, brothers and sisters, we remember all our beloved ones who have gone before us to the Lord. May the Merciful God grant them Eternal Peace!

| | |
|---|---|
| 16 / 11 / 1991 | Fr. A.S. Durairaj |
| 23 / 11 / 1991 | Fr. M. Susai Manickam |
| 16 / 11 / 2001 | Fr. Pascal D'Silva |
| 17 / 11 / 2006 | Fr. P. Gnanapragasam |

May their souls Rest in Peace!

## TRIBUNAL (September 2024)

**The following case is admitted and the matrimonial process is on:**

Mr. J. Vincent (Kovilpatti) Vs Mrs. Antony Brindha (Kamanayakkanpatti).

-----------

Tribunal income from November 2023 to October 2024: Rs. 27,150/

**Rev. Dr. Fr. Xavier Devasagayam, Judicial Vicar**
Palayamkottai Diocese

# தமிழ்நாடு கத்தோலிக்க இளைஞர் இயக்கம்
# பாளையங்கோட்டை மறைமாவட்டம்

**2024 - அக்டோபர் மாத பணியறிக்கை**

தமிழ்நாடு கத்தோலிக்க இளைஞர் இயக்கம் பாளையங்கோட்டை மறைமாவட்டம் நடத்தும் **"மாபெரும் ஜுபிலி – 2025"** முன்னிட்டு **"இளைஞர் ஒருங்கிணைந்த விழா – 2024"** கொண்டாடப்படுகிறது. அதன் தொடக்கமாக 13.10.2024 அன்று அம்பை மறைவட்ட பங்கு இளைஞர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள், புனித பவுல் திருத்தலம் சிங்கம்பாறை பங்கில் வைத்து நடைபெற்றது. Cricket, Volley Ball Throw Ball (Girls) ஆகிய போட்டிகளை பங்குத்தந்தை அருட்பணி. நேசமணி மற்றும் அருட்பணி. ஜார்ஜ் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. அம்பை மறைவட்டத்தில் உள்ள பங்குகளில் ஏழு பங்குகளைச் சார்ந்த இளைஞர், இளம்பெண்கள் இப்போட்டிகளில் பங்கேற்றார்கள். **Cricket** போட்டியில் முதல் பரிசு சிங்கம்பாறை பங்கும், இரண்டாம் பரிசை சிங்கம்பாறை கிளைப்பங்கு இலந்தைகுளம், மூன்றாம் பரிசை கருத்தப்பிள்ளையூர் பங்கு இளைஞர்களும் பெற்றார்கள். **Volley Ball** போட்டியில் முதல் பரிசை இருதய குளம் பங்கும், இரண்டாம் பரிசை வீரவநல்லூர் பங்கும், மூன்றாம் பரிசை சிங்கம்பாறை பங்கு இளைஞர்கள் பெற்றார்கள். இளம்பெண்களுக்கான **Throw Ball** போட்டியில் முதல் பரிசை இருதயகுளம் பங்கும், இரண்டாம் பரிசை சிங்கம்பாறை பங்கும், மூன்றாம் பரிசை கருத்தப்பிள்ளையூர் பங்கு இளம்பெண்களும் பெற்றார்கள். இளைஞர் மற்றும் இளம்பெண்கள் அனைவரையும் பங்கேற்க ஊக்கப்படுத்திய அனைத்து பங்குத்தந்தையர்களுக்கும் நன்றிகள்.

செயலர்,

அ.இம்மானுவேல் பிரான்சிஸ் ராஜ்,

இளைஞர் பணிக்குழு.

# இளம் மாணாக்கர் இயக்கம்

10.10.2024 கோவில்பட்டி புனித ஜோசப் மேல்நிலைப்பள்ளியில் இளம் மாணாக்கர் இயக்கமானது இளம் மாணாக்கர் இயக்கத்தின் மறைமாவட்ட ஒருங்கிணைப்பாளர் திருமதி. மாலா அவர்களால் புதிதாக தொடங்கப்பட்டது. இக் கூட்டத்தில் இளம் மாணாக்கர் இயக்கத்தின் வரலாறு, நோக்கம், கூட்டம் நடத்தும் முறைகள் பற்றி மாணவர்களுக்கு பயிற்சி கொடுக்கப்பட்டன. இளம் மாணாக்கர்

இயக்க உறுப்பினராக 20 மாணவ, மாணவிகள் கலந்து கொண்டார்கள். இயற்கையும், கலாச்சாரமும் என்ற தலைப்பில் பள்ளியின் வழிகாட்டி ஆசிரியர் அனிதா அவர்கள் தலைமையில் கலந்துரையாடல் நடைபெற்றது. மாணவ, மாணவியர்கள் தங்களது கருத்துக்களைக் கூறினார்கள். கதை, விளையாட்டு மற்றும் இயக்கப் பாடலுடன் நிறைவு பெற்றது.

10.10.2024 காமநாயக்கன்பட்டி புனித அலாய்சியஸ் உயர்நிலைப்பள்ளியில் இளம் மாணாக்கர் இயக்கமானது இளம் மாணாக்கர் இயக்கத்தின் மறைமாவட்ட ஒருங்கிணைப்பாளர் திருமதி. மாலா அவர்களால் புதிதாக தொடங்கப்பட்டது. இக் கூட்டத்தில் இளம் மாணாக்கர் இயக்கத்தின் வரலாறு, நோக்கம், கூட்டம் நடத்தும் முறைகள் பற்றி மாணவர்களுக்கு பயிற்சி கொடுக்கப்பட்டன. இளம் மாணாக்கர் இயக்க உறுப்பினராக 20 மாணவ, மாணவிகள் கலந்து கொண்டார்கள். தகவல் தொடர்பு சாதனங்களால் ஏற்படும் தீமைகள் என்ற தலைப்பில் பள்ளியின் வழிகாட்டி ஆசிரியர் திருமதி. ஸ்டெல்லா அவர்கள் தலைமையில் கலந்துரையாடல் நடைபெற்றது. மாணவ, மாணவியர்கள் தங்களது கருத்துக்களைக் கூறினார்கள். கதை, விளையாட்டு மற்றும் இயக்கப் பாடலுடன் நிறைவு பெற்றது.

செயலர்,

அ.இம்மானுவேல் பிரான்சிஸ் ராஜ்,

இளைஞர் பணிக்குழு.

## பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பணியகம்

**2024 - அக்டோபர் மாத பணியறிக்கை**

02.10.2024 அன்று மாலைநேர இணைக்கல்வி ஆசிரியர்கள் மற்றும் ஒருங்கிணைப்பாளர்களுக்கான ஒருங்கிணைப்புக் கூட்டமானது காலை 11 மணி அளவில் சாந்திநகர் ஜூபிலி மேய்ப்புப் பணி நிலையத்தில் வைத்து நடைபெற்றது. கயத்தார் இணைக்கல்வி ஆசிரியர்கள் திருமதி.பாத்திமா, திருமதி.ராணி, திருமதி.ஏஞ்சல் ஜெனிபர் இறைவழிபாட்டை முன்னெடுத்தார்கள். ஒருங்கிணைப்பாளர் திரு. தமிழரசன் அனைவரையும் வரவேற்றார்கள். முழுநேரப்பணியாளர்

திருமதி. மாலா கடந்த கூட்டறிக்கை வாசித்தார்கள். ஒருங்கிணைப்பாளர் திருமதி. மாலா அவர்கள் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பணியகம் ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கம் மற்றும் அதன் செயல்பாடுகள், பணியகத்தில் இணைக்கல்வி ஆசிரியர்கள் மற்றும் ஒருங்கிணைப்பாளர்களின் பங்களிப்பு குறித்து பேசினார்கள். அதன்பின்பு மாலை நேர இணைக்கல்வி மையங்களின் வளர்ச்சி, எதிர்காலப் பணிகள் குறித்தும் மாணவ, மாணவியரின் வருகையைக் குறித்தும் செயலர் தந்தை அனைவரோடும் கலந்து பேசினார்கள். இறுதியில் மாலை நேர இணைக்கல்வி மாணவ, மாணவியர்களின் வருகைப் பதிவேடு சரிபார்க்கப்பட்டு, மறைமாவட்டம் வழங்கும் ஊக்கத்தொகை அனைவருக்கும் வழங்கப்பட்டது. புதிதாக 10 இணைக்கல்வி ஆசிரியர்கள் பங்கேற்றார்கள்.

செயலர்
அ. இம்மானுவேல் பிரான்சிஸ் ராஜ்

## கிறிஸ்தவ வாழ்வு பணிக்குழு

### 2024 - அக்டோபர் மாத பணியறிக்கை

**I.** வினாத்தாள் தயாரிப்பு:

ஒன்று முதல் எட்டு முடிய உள்ள வகுப்புகளுக்கு மறைக்கல்வி, நல்லொழுக்கப் பாடங்களின் அரையாண்டு தேர்விற்கான வினாத்தாள்களும், 9 முதல் 12 முடிய உள்ள வகுப்புகளுக்கு ஆண்டு இறுதித் தேர்வு வினாத்தாள்களும் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகின்றது.

**II.** மாபெரும் விவிலிய வினாடி வினா போட்டி:

மாபெரும் கிறிஸ்து பிறப்பின் யூபிலி 2025-ஆம் ஆண்டை கொண்டாடும் விதமாகவும், இந்த ஆண்டு விவிலிய மாதத்தை சிறப்பிக்கும் விதமாகவும் நான்கு நற்செய்தி நூல்களிலிருந்து தயாரிக்கப்பட்ட மாபெரும் விவிலிய வினாடி வினா போட்டி மறைமாவட்டம் முழுமைக்கும் 5 மறைவட்ட மையங்களில் சிறப்பாக நடத்தி முடிக்கப்பட்டது. இம்மாபெரும் விவிலிய வினாடி வினா போட்டிக்கு ஒவ்வொரு பங்கு தளங்களிலிருந்தும் 5 பேர் வீதம் அழைக்கப்பட்டு போட்டிகள் நடத்தப்பட்டன. இறுதியில் 15 சுற்றுக்களை கொண்ட இப்போட்டிகளில் முதல் மூன்று இடங்களை பெற்றவர்களுக்கு மதிப்பு மிக்க பரிசுகளும்,

கலந்து கொண்ட மற்ற குழுவினர்களுக்கும், பார்வையாளர்களாக கலந்து கொண்டு வினாக்களுக்கு பதில் கூறியவர்களுக்கும் சிறப்பான பரிசுகள் வழங்கப்பட்டன.

**III.** கருத்தமர்வு:

நமது மேதகு ஆயர் அவர்களின் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலின்படி கிறிஸ்து பிறப்பின் மாபெரும் யூபிலி 2025-ஆம் ஆண்டினை சிறப்பிக்கும் வகையில் **"இரண்டாம் வத்திக்கான் சங்க ஒளியில் திருவழிபாட்டில் திருஇசை"** என்ற மையச் சிந்தனையின் அடிப்படையில் பங்குத்தளங்களிலுள்ள பாடகற்குழு, திருஇசை மீட்டுவோர்களுக்கு இருதயநகர், உடையார்பட்டி வானவில் திருமண மண்டபத்தில் வைத்து 26.10.2024 சனிக்கிழமை மறைமாவட்ட முதன்மைக்குரு பேரருட்திரு. G. குழந்தைராஜ் அவர்கள் தலைமையில் கருத்தமர்வு நடத்தப்பட்டது. பாளையங்கோட்டை தூய சவேரியார் தன்னாட்சி கல்லூரி முதல்வர் அருட்திரு முனைவர் யூ. காட்வின் ரூபஸ் சே.ச அவர்கள் இக்கருத்தரங்கை இரண்டு அமர்வுகளாக மிகச் சிறப்பாக வழிநடத்தினார்கள் மிகவும் பயனுள்ளதாக அமைந்த இக்கருத்தமர்வில் 275 பேர் கலந்து கொண்டு பயன்பெற்றுச் சென்றனர்.

**IV.** பங்கு பணிகள்:

1. வெங்கடாசலபுரம் பங்கில் கீபோர்டு பயிற்சி அளிக்கப்பட்டது..
2. அலவந்தான்குளம் பங்கில் நடைபெற்ற விவிலிய வினாடி வினா போட்டிக்கு தயாரிப்பு பணி செய்து தரப்பட்டது.
3. கல்லிடைக்குறிச்சி, வீரவநல்லூர் பங்குகளில் விவிலிய விழாவிற்கு வினாத்தாள்கள் தயாரித்து கொடுத்து உதவி செய்யப்பட்டது.
4. மகாராஜநகர் பங்கில் விவிலிய எழுத்து தேர்வு நடத்துவதற்கு, வினாத்தாள் தயாரித்து உதவி செய்யப்பட்டது.
5. அலவந்தான்குளம் பங்கில் உறுதிபூசுதல் அருட்சாதன தயாரிப்புப் பணிகள் செய்து தரப்பட்டது.
6. கருத்தப்பிள்ளையூர் பங்கில் உறுதிபூசுதல் தயாரிப்பு வகுப்புகள் எடுத்து உதவி செய்யப்பட்டன.

அருட்பணி. ச. லூர்து மரிய சுதன்
செயலர்

## அக்டோபர் - 2024 பணியறிக்கை

1. குழந்தைகள் வரவேற்பு பிரிவில் புதிதாக 2 சிறுவர்கள், 14 சிறுமியர் என மொத்தம் 16 பேர் அனுமதிக்கப்பட்டுள்ளனர். கல்வியைத் தொடர்வதற்காக 2 குழந்தைகள் பிற இல்லங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்கள். தற்போது 2 சிறுவர், 12 சிறுமியர் என 14 பேர் உள்ளார்கள்.
2. குழந்தைத் தத்து திட்டத்தில் இம்மாதம் 1 ஆண் மற்றும் 3 பெண் குழந்தைகள் தத்து கொடுக்கப்பட்டுள்ளது. இரட்டை பெண் குழந்தைகள் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தற்போது இல்லத்தில் 3 ஆண், 5 பெண் குழந்தைகள் இல்லத்தில் பராமரிக்கப்படுகின்றனர்.
3. திறந்த நிலைப் புகலிடத் திட்டத்தில் இம்மாதம் 15 கிராமங்களில் களப்பணி மேற்கொள்ளப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. தற்போது 12 ஆண், 8 பெண் குழந்தைகள் இல்லத்தில் பராமரிக்கப்படுகின்றனர்.

### சிறப்பு நிகழ்வுகள்

- 03.10.2024 அன்று சென்னையில் மாநில தத்து வள ஆதார மையம் சார்பாக கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. இதில் ஒருங்கிணைப்பாளர் மற்றும் சமூகப் பணியாளர் கலந்துகொண்டார்கள்.
- 04.10.2024 அன்று நடைபெற்ற 30-ம் ஆண்டு இல்லவிழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. இதில் சிறப்பு விருந்தினராக பாளை மறைமாவட்ட ஆயர், திருநெல்வேலி உதவி மாவட்ட ஆட்சித் தலைவர், திருநெல்வேலி மாநகராட்சி மேயர், மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலுவலர், குழந்தை நலக்குழு உறுப்பினர் ஆகியோர்கள் கலந்துகொண்டு சிறப்புரை வழங்கினார்கள்.
- 08.10.2024 அன்று நடைபெற்ற குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறை இயக்குனர் திரு. ஜானி பாம் வர்க்கிஸ் IAS அவர்களால் நடத்தப்பட்ட தமிழ்நாட்டில் குழந்தைகளுக்காகப் பணிபுரியும் பங்குதாரர்களின் ஆலோசனை மற்றும் கலந்துரையாடல் கூட்டத்தில் நமது திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் காணொலி வாயிலாக கலந்து கொண்டார்கள்.

- 09.10.2024 அன்று திருநெல்வேலி மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகு சார்பில் நடத்தப்பட்ட மதிப்பாய்வு கூட்டத்தில் திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் கலந்து கொண்டார்கள்.
- 16,17.10.2024 ஆகிய தேதிகளில் நடைபெற்ற குழந்தை தத்தெடுத்தல் பற்றிய கூட்டத்தில் நமது திட்ட ஒருங்கிணைப்பாளர் கானொலி வாயிலாக கலந்து கொண்டார்கள்.

அருட்திரு. அ. ஞானதினகரன்
இயக்குநர்.

## திருநெல்வேலி சமூக சேவை சங்கம்
## பாளையங்கோட்டை

**அக்டோபர் - 2024 பணியறிக்கை**

கோல்பிங் இந்தியா:

- ➢ இத்திட்டத்தின் கீழ் கோல்பிங் குழு கூட்டமானது நடுவக்குறிச்சி மற்றும் சீனிவாசநகரில் வைத்து குழு கூட்டம் நடத்தி தனிகடன் படிவங்கள் பூர்த்தி செய்யப்பட்டு ஒரு நபருக்கு ரூ.20,000 வீதம் பத்து நபருக்கு ரூ.2,00,000 கடன் வழங்கப்பட்டது.
- ➢ 23.10.2024 அன்று கோட்டார் பல்நோக்கு சமூக சேவை சங்கத்தில் வைத்து கோல்பிங் ஒருங்கிணைந்த கூட்டம் மற்றும் வாக்கெடுப்பு நடைபெற்றது. இதில் இயக்குநர், ஒருங்கிணைப்பாளர் மற்றும் மாவட்ட கோல்பிங் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

காரித்தாஸ் இந்தியா

- ➢ 14.10.2024 அன்று காரித்தாஸ் இந்தியா கூட்டம் இணையதளத்தின் வழியாக நடைபெற்றது. இதில் இயற்கை சீற்றங்கள் மூலம் நடைபெறும் பாதிப்பால் குழந்தைகளுக்கு ஏற்படும் பிரச்சினைகள் குறித்து பேசப்பட்டது.

சங்கமம் மற்றும் சிறுகடன் திட்டம்

- ➢ சங்கமம் தொடர்பாளர் கூட்டம் அனைத்து ஒன்றியங்களிலும் நடைபெற்றது. கணக்காளர்கள் கலந்துகொண்டு சேமிப்பு செலுத்திகடன் பெற்றுச் சென்றனர். சிறுகடன் திட்டத்தில் இம்மாதம் 30 குழுக்களைச் சார்ந்த 320 நபர்கள் பல்வேறு பொருளாதார செயல்பாடுகளுக்காக கடன் பெற்றனர் மேலும் தனிநபர் கடன் இம்மாதம் 410 பேருக்கு கொடுக்கப்பட்டது.

நெல்லைசங்கமம்

- நெல்லை சங்கம நிதி நிறுவனத்தில் இம்மாதம் 14 நபர்களுக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது. மேலும் நிதி நிறுவனத்தில் 5 ஆண்டுகள் தொடர் வைப்பு கணக்கு செலுத்தி முதிர்ச்சியுற்ற 449 உறுப்பினர்களுக்கு தொடர் வைப்பு மற்றும் நிலை வைப்பு தொகையும் கொடுக்கப்பட்டது.

இதர செயல்பாடுகள்

- சிறுபான்மையினர் கடன் திட்டத்தில் கீழ் முக்கூடல் மத்திய கூட்டுறவு வங்கியில் மூலம் பாப்பாக்குடி ஒன்றியம் மைலப்புரம் - புனித அந்தோணியார் மகளிர் சுயஉதவிக்குழுவிற்கு கறவை மாடு கடனாக நபர் ஒன்றுக்கு ரூ.90,250 வீதம் 11 நபர்களுக்கு ரூ.9,92,750 கடன் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.
- திருநெல்வேலி சமூக சேவை சங்கத்தின் கீழ் உலக உணவு தினத்தை அனுசரிக்கும் வகையில் அக்டோபர் 16ம் தேதி அம்பாசமுத்திரம் ஒன்றியம் இருதயகுளத்தில் வைத்து உலக உணவு தினம் நடைபெற்றது. இதில் சிறுதானியங்கள் கண்காட்சி, பாரம்பரிய சிற்றுண்டிகள் கண்காட்சி மற்றும் நஞ்சு இல்லா உணவே நலமான வாழ்வு என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது. இதற்கு சிவந்திபுரம் ஊராட்சி மன்ற தலைவர் திரு.ஜெகன் தலைமை தாங்கினார்கள். இருதயகுளம் பங்குத்தந்தை அருட்திரு.பாக்கிய செல்வன் கண்காட்சியை திறந்து வைத்தார். இதில் 200 சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியை இயக்குநர் தந்தை அவர்கள் வழிநடத்தினார்கள்.
- 18.10.2024 அன்று Inter Agency Group (IAG) என்ற நிறுவனத்தின் சார்பாக நமது அலுவலகத்தில் வைத்து கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் இயற்கை சீற்றங்களில் பாதிக்கப்படும் மக்களுக்கு நாம் எவ்வாறு உதவி செய்யது மற்றும் தென் மண்டலத்தின் சார்பாக மாவட்ட பிரதிநிதிகளை தேர்வு செய்வுதல் பற்றியும் பேசப்பட்டது. இக்கூட்டத்தில் ஒருங்கிணைப்பாளர். தேவசகாயம் கலந்து கொண்டார்.

விண்மின்

- சென்னையில் நடைபெற்ற முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டு போட்டியில் விண்மின் இல்ல குழந்தைகள் திவ்யா மற்றும் பவித்ரா கலந்து கொண்டு குண்டு எறிதல் போட்டியில்

இரண்டாவது, மூன்றாவது இடத்தை பிடித்து ரூபாய்.75,000 மற்றும் ரூ.50000 பரிசுத் தொகை பெற்றுள்ளார்கள்.

இயக்குநர்
அருட்திரு.**S**.பிரான்சிஸ் சேவியர்
இயக்குநர் - TSSS

## நற்செய்தி அறிவிப்புப் பணிக்குழு அறிக்கை

### அக்டோபர் - 2024 பணியறிக்கை

அக்டோபர் 04,18&25 வெள்ளிக்கிழமைகளில் காலை 10.30 மணி முதல் மதியம் 01.30 மணி வரை குணமளிக்கும் சிறப்பு செப வழிபாடு தூய அந்தோணியார் மறைமாவட்ட திருத்தல மண்டபத்தில் வைத்து நடைபெற்றது. ஏறக்குறைய 75 முதல் 80 பேர் வரை கலந்து கொண்டனர். நிறைவில் மதிய உணவு வழங்கப்பட்டது. இதில் அருட்திரு. ஜெமல்ஸ், சகோ. ராப்சன் வடக்கன்குளம், சகோ.ரொமிஸ்டன் குரும்பூர் இறைசெய்தி வழங்கினர். கத்தோலிக்க நற்செய்திக் குழுவினர் இறைபுகழ்ச்சி மற்றும் மன்றாட்டு ஏறெடுத்தனர். அக்டோபர் 11&12 இரு தினங்கள் குடும்பதியானம் அன்னை தெரசா அரங்கம், தூய அந்தோணியார் மறைமாவட்ட திருத்தல வளாகத்தில் நடைபெற்றது. சகோ. கிறிஸ்துதாஸ், மார்தாண்டம், அருட்திரு. A. ஜோசப் கென்னடி, அருட்திரு. ஜோமிக்ஸ், அருட்திரு. ஜெமல்ஸ், அருட்திரு. ஆல்பர்ட் ஜோசப் இறைசெய்தி வழங்கினர். 220 பேர் கலந்து இறை ஆசீர் பெற்றனர். அக்டோபர் 20 உபவாசகூட்டமும், அக்டோபர் 26 திருவிழிப்பு செபமும் நடைபெற்றது. ஏறக்குறைய 150 பேர் கலந்து பயன்பெற்றனர். சகோ. கிரேசியஸ் மற்றும் சகோ. ஜேம்ஸ் தூத்துக்குடி இறைசெய்தி வழங்கினர். கிராம ஊழியங்கள், Whatsapp குழுவின் மூலம் செபம் நடைபெற்றது.

ஆங்கில மாதத்தின் முதல்நாள் (01.10.24) செவ்வாய்கிழமை சென்னை புனித தோமையார்மலையில் உள்ள MSFS இல்லத்தில் எழுப்புதல் பரிந்துரை செபமும், மாதத்தின் முதல் திங்கள்கிழமை (07.10.24)

ராயப்பேட்டை புனித காணிக்கை அன்னை ஆலயத்திலும், மாதத்தின் முதல் வியாழன் (03.10.24) நெசப்பாக்கம், புனித அன்னாள் ஆலயத்திலும் எழுப்புதல் பரிந்துரை செபம் நடைபெற்றது. மாதத்தின் 2ம் தேதி புதன்கிழமை தென்காசி புனித மிக்கேல் அதிதூதர் திருத்தலத்தில் கட்டுக்களை அவிழ்க்கும் அமாவாசை முழுஇரவு செபமும், 2ம் சனி புதுவாழ்வு தியான நிலையத்தில் முழு இரவு செபமும் நடைபெற்றது. மாதத்தின் முதல் சனி (05.10.24) தென்காசி, இலுப்பையூரணி (கோவில்பட்டி) மற்றும் ஆசாரிப்பள்ளம் புனித அன்னாள் இல்லத்தில் ஆசீர்வாத உபவாசக்கூட்டம் நடைபெற்றது. மாதத்தின் 2ம் சனி (12.10.24) அம்பை புனித சூசையப்பர் ஆலயம், கோடம்பாக்கம் வளன் இல்லத்திலும் ஆசீர்வாத உபவாசக்கூட்டம் நடைபெற்றது. மாதத்தின் 3ம் சனி (19.10.24) திருஇருதய ஆண்டவர் ஆலயம், (இருதயநகர்) சகாயமாதா ஆலயம் (சொக்கம்பட்டி) புனித சூசையப்பர் ஆலயம் (காரவிளை) போன்ற இடங்களில் ஆசீர்வாத உபவாசக்கூட்டம் நடைபெற்றது. அக்டோபர் மாதத்திற்கான உள்ளிருப்புத் தியானம் 24 – 27 (வியாழன்-ஞாயிறு) தேதிகளில் சிறப்பாக நடைபெற்றது. தியானத்தின் நிறைவு நாளான 27.10.24 ஞாயிறு கத்தோலிக்கப் புதுவாழ்வு செபக்குழுவின் 28ம் ஆண்டு தொடக்கத்தை முன்னிட்டு அபிஷேக ஆராதனையும், நன்றி கூட்டுத் திருப்பலியும், அன்பு விருந்தும் நடைபெற்றது. ஒவ்வொரு நாளும் தினமும் இரவு 8 மணி முதல் 9 மணி வரை கூகுள்மீட் வழியாக எழுப்புதல் பரிந்துரை செபமும், புதுவாழ்வு தியான நிலையத்தை தேடி வருகின்ற குடும்பங்களுக்கு ஆற்றுப்படுத்துதலும், விசுவாசத்தில் நிலைத்திருக்க செபப்பயிற்சிகளும், தொலைபேசியில் வரும் விண்ணப்பங்களுக்கு செபிப்பதும், இலவச விவிலியம் வழங்குதல் போன்ற பணிகளும் செய்து வருகின்றோம்.

பாளையங்கோட்டை மறைமாவட்ட நற்செய்திப்பணிக்குழு ஒருங்கிணைப்பு கூட்டமானது மறைமாவட்ட நற்செய்தி பணிக்குழு செயலர் மற்றும்

ஒருங்கிணைப்பாளர் அருட்தந்தை V.K.S. அருள்ராஜ் அவர்கள் தலைமையில் சமாதானபுரம் மார்க்கெட் புனித அந்தோணியார் திருத்தல வளாகத்தில் உள்ள கத்தோலிக்க நற்செய்திகுழு அலுவலகத்தில் 02.10.2024 அன்று புதன்கிழமை மாலை 03.30 மணிக்கு தொடங்கியது. முதல் பகுதியாக வருகை பதிவு செய்யப்பட்டது. இதில் பாளை மறைமாவட்டத்தை சார்ந்த பல்வேறு நற்செய்தி குழுவின் பொறுப்பாளர்கள் 17 நபர்கள் கலந்து கொண்டார்கள். பரிசுத்த ஆவியானவரின் பாடலை அனைவரும் பாட அருட்தந்தை V.K.S. அருள்ராஜ் அவர்கள் அனைவரையும் வரவேற்று கூட்டத்தின் நோக்கம் குறித்து தொடக்க உரை ஆற்றி செபம் செய்தார்கள். தொடர்ந்து மறைமாவட்ட நற்செய்தி ஊழியர்கள் தங்கள் பெயர் மற்றும் தான் சார்ந்து இருக்கும் செபக்குழுவை அறிமுகப்படுத்தினார்கள். இறைவேண்டல் ஆண்டில் மறைமாவட்ட நற்செய்திபணிக்குழுவின் எதிர்கால வளர்ச்சியை குறித்து பேசப்பட்டு கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

தீர்மானம்: 1

இறைவேண்டல் ஆண்டு முடிவதற்குள் மறைமாவட்ட அளவில் ஒருங்கிணைந்த நற்செய்தி கூட்டம் நடத்துவது.

தீர்மானம்: 2

இயேசுகிறிஸ்துவின் யூபிலி ஆண்டு 2025 மறைமாவட்ட அளவில் நான்கு நாட்கள் சிறப்பு தியானம் நடத்துவது, இடம், தேதி, செலவுகள் குறித்து கலந்து பேசி முடிவு எடுப்பது.

தீர்மானம்: 3

இந்த சிறப்பு தியானத்தில் கத்தோலிக்க திருச்சபையை ஏற்றுக்கொள்ளும் பிற சகோதர சபையை சார்ந்த சிறந்த நற்செய்தி ஊழியர்களை அழைப்பது.

தீர்மானம்: 4

10.11.2024 அன்று ஞாயிற்றுகிழமை மறைமாவட்ட நற்செய்தி ஊழியர்களுக்கு சிறப்பு பயிற்சி நடத்துவது. இடம் மார்க்கெட் புனித அந்தோணியார் ஆலயம் புனித அன்னை திரேஸ்ஸா மண்டபம் அல்லது சாந்திநகர் தேம்பாவணித்தோட்டம்.

தீர்மானம்: 5

இறைவேண்டல் ஆண்டு முடிவதற்குள் ஐந்து மறைவட்டத்திலும், மறைவட்ட அதிபர்கள் மற்றும் பங்குதந்தையர்களில் அனுமதியோடு கலந்து பேசி இறைவேண்டல் ஆண்டின் சிறப்பு நற்செய்தி கூட்டம் நடத்துவது.

இந்த ஐந்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு கீழ்கண்ட ஊழியர்கள் சகோ. கஸ்பார், சகோ. அருள்ராஜ், சகோ. ஜெரால்டு, சகோ.ஸீதர் ஆகியோர் செபம் செய்தார்கள். இறுதியாக அருட்தந்தை V.K.S. அருள்ராஜ் அவர்கள் யோவான் 17:11 "தூய தந்தையே நாம் ஒன்றாய் இருப்பது போல அவர்களும் ஒன்றாய் இருப்பார்களாக" என்ற வசனத்தின்படி தலைமை உரை ஆற்றி செபம் செய்து கூட்டம் அன்னைமரியாள் பாடலோடு நிறைவடைந்தது.

01.10.24 பேட்டை பங்கு புனித அந்தோணியார் ஆலயம் நற்கருணை ஆண்டவர் பாதத்தில் பாளை மறைமாவட்ட வளர்ச்சிக்காக சிறப்பு பரிந்துரை செபம். 02.10.24 அன்று மாலை 4 மணிக்கு பாளை கத்தோலிக்க நற்செய்தி குழு அலுவலகத்தில் மறைமாவட்ட நற்செய்தி பணிக்குழு செயலர் அருட்தந்தை V.K.S. அருள்ராஜ் அவர்கள் தலைமையில் மறைமாவட்ட நற்செய்தி ஊழியர்கள், ஒருங்கிணைப்பு கூட்டம். 05.10.24 திருநெல்வேலி அரசு பொது மருத்துவமனை ஊழியம். 06.10.24 சிங்கம்பாறை பங்கு இல்லம் சந்திப்பு ஊழியம். 09.10.24 அலவந்தான்குளம் பங்கு இல்லம் சந்திப்பு ஊழியம். 11.10.24 சமாதானபுரம் மார்க்கெட் புனித அந்தோணியார் ஆலயம் கததோலிக்க

நற்செய்தி குழு குடும்பமுகாம் தன்னார்வ ஊழியராக பங்கேற்பு. 12.10.24 தூத்துகுடி மறைமாவட்டம் இன்னாசியார்புரம் புனித இன்னாசியார் ஆலயத்தில் குடும்பமுகாம் சிறப்பு செய்தி. 13.10.24 பேட்டை பங்கு திருப்பணி கரிசல்குளம் கிராமத்தில் கிறிஸ்துவை அறியாத மக்கள் மத்தியில் ஊழியம். 14.10.24 கயத்தார் பங்கு திருமதி மஞ்சுளா சேவியர் அவர்கள் வீட்டு செபக்கூட்டம். 16.10.24 திருநெல்வேலி அரசு சிறப்பு பொதுமருத்துவமனை ஊழியம். 17.10.24 & 18.10.24 அம்பை பங்கு பிரம்மதேசம் கிராமத்தில் இயேசுகிறிஸ்துவை அறியாத மக்கள் மத்தியில் ஊழியம். 20.10.24 சங்கரன்கோயில் பங்கு சத்திரக்கொண்டான் கிராமம் புனித இஞ்ஞாசியார் ஆலயத்தில் சிறப்பு இறைவேண்டல் ஆண்டு தியானம். 22.10.24 வண்ணாரபேட்டை காவேரி மருத்துவமனையில் உடல்நலக்குறைவு உள்ள ஒரு குடும்பத்தை சந்தித்து செபம் செய்தல். 23.10.24 நெல்லை டவுண் பங்கு வெள்ளாளங்குளம் கிராமத்தில் திரு. மரியதாசன் மலர் குடும்பத்தில் ஆறுதல் செபக்கூட்டம். 25.10.24 தூத்துகுடி மறைமாவட்டம் வேம்பார் பங்கு புனித பவுல் நகர் ஆரோக்கியமாதா ஆலயத்தில் மாலை நற்செய்தி பெருவிழா. 26.10.24 சங்கரன்கோயில் மறைவட்டம் சிதம்பராபுரம் புனித அன்னை மரியாள் ஆலயத்தில் இறைவேண்டல் ஆண்டு நற்செய்தி கூட்டம். 27.10.24 சங்கரன்கோயில் பங்கு பெரும்பத்தூர் கிராமம் புனித சவேரியார் ஆலயம் இல்லம் சந்திப்பு ஆலயத்தில் சிறப்பு செபவழிபாடு. 30.10.24 & 31.10.24 பாளையங்கோட்டை கிறிஸ்துராஜா மேல்நிலைபள்ளி இறை ஊழியர் கௌசானல் அடிகளால் சிற்றாலயத்தில் தனி செபம் மற்றும் தனி தியானம். இல்லங்களை சந்தித்தது ஆற்றுப்படுத்தும் பணியும், படிக்கும் மாணவ, மாணவியர், இளம்சிறார், வாலிபர்கள், மாற்று திறனாளிகள் ஆட்டோ மற்றும் வேன் ஓட்டுனர்கள் மத்தியில் ஊழியம் நடைபெறுகிறது.

அருள்பணி V.K.S. அருள்ராஜ்,

செயலர்.

# குடும்ப நலவாழ்வுப் பணிக்குழு

## 2024 அக்டோபர் மாத அறிக்கை

1) திருமண முன் தயாரிப்பு பயிற்சி

| | | |
|---|---|---|
| பங்கேற்றவர்கள் : ஆண்கள் | - | 31 பேர் |
| பெண்கள் | - | 40 பேர் |
| மொத்தம் பங்கேற்றவர்கள் | - | 71 பேர் |

2) திருமணத் தகவல் நிலையம்

| | | |
|---|---|---|
| பதிவு செய்தவர்கள் | - | 32 பேர் |
| பார்வையிட்டவர்கள் | - | 81 பேர் |
| திருமண ஏற்பாடாகியுள்ளோர் | - | 11 பேர் |

3) திருமண முன் தயாரிப்பு பயிற்சி விபரம்

நவம்பர் 2024 01, 02.11.2024 - முதல் வெள்ளி, சனிக்கிழமை
காலை 9.00 மணி முதல் மாலை 4.30 மணி வரை
15, 16.11.2024 - மூன்றாம் வெள்ளி, சனிக்கிழமை
காலை 9.00 மணி முதல் மாலை 4.30 மணி வரை

டிசம்பர் 2024 06, 07.12.2024 - முதல் வெள்ளி, சனிக்கிழமை
காலை 9.00 மணி முதல் மாலை 4.30 மணி வரை
20, 21.12.2024 - மூன்றாம் வெள்ளி, சனிக்கிழமை
காலை 9.00 மணி முதல் மாலை 4.30 மணி வரை

அன்புடன்,
அருட்தந்தை ஜெமல்ஸ் ஜேம்ஸ்,
செயலர்.

# கிறிஸ்து பிறப்பின் யூபிலி - 2025
# ஒரு நாள் சிறப்பு கருத்தரங்கு
# தென்காசி மறைவட்டம்

தென்காசி மறைவட்ட அளவில் யூபிலி 2025 ஐ முன்னிட்டு, தயாரிப்பு நிகழ்வாக ஒரு நாள் சிறப்பு கருத்தரங்கம் 13.10.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி முதல் மாலை 4.30 மணி வரை தென்காசி தூய மிக்கேல் அதிதூதர் திருத்தலத்தில் வைத்து நடைபெற்றது. இக்கருத்தரங்கிற்கு பாளை மறைமாவட்ட ஆயர் மேதகு.Sஅந்தோனிசாமி D.D.,D.C.L., அவர்கள் தலைமை தாங்கினார்கள். தென்காசி மறைவட்ட அதிபரும், திருத்தல அதிபருமான அருள்முனைவர்.P.போஸ்கோ குணசீலன் அவர்கள் முன்னிலை வகித்தார்கள். தென்காசி பங்கின் ஆசிரியர்கள் இறைவேண்டல் செய்தார்கள். மறைமாவட்ட யூபிலி குழு ஒருங்கிணைப்பாளர், அருட்பணி.அ.பீற்றர் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்கள். மறைவட்ட அதிபர் அருள்முனைவர் .P.போஸ்கோ குணசீலன் அவர்கள் அறிமுக உரை வழங்கினார்கள். இக்கருத்தரங்கில் 550 இறைமக்கள் கலந்து கொண்டார்கள்.

முதல் அமர்வில நமது ஆயர் அவர்கள் யூபிலி - 2025ஐ குறித்த விளக்கத்தையும், யூபிலி 2025 ஆண்டு துவக்கம் மற்றும் மறைமாவட்ட அளவில் யூபிலி ஆண்டில் நடைபெற இருக்கும் நிகழ்வுகள் குறித்தும் தெளிவாக எடுத்துக் கூறினார்கள். மேலும் இரண்டாவது அமர்வில் இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் கோட்பாட்டு ஏடுகளான திருஅவை, இறைவெளிப்பாடு, திருவழிபாடு மற்றும் இன்றைய உலகின் திருஅவை குறித்தும், அவ் ஏடுகளில் இடம் பெற்றுள்ள முக்கியமான கருத்துக்கள் குறித்தும் விரிவாக எடுத்துக் கூறினார்கள். அதனைத் தொடர்ந்து மக்கள் எழுப்பிய கேள்விகளுக்கு விளக்கம் அளித்தார்கள். மதிய உணவிற்கு பிறகு மூன்றாவது அமர்வில் அருள்முனைவர்.ஜோமிக்ஸ் அவர்கள் இறைவேண்டல் பற்றிய திருத்தந்தையின் கருத்துக்கள் மற்றும் இறைவேண்டலின் அவசியம் குறித்து தனது கருத்துக்களை பகிர்ந்து கொண்டார்கள். பிற்பகல் 3.15 மணிக்கு குருகுல முதல்வர் பேரருட்திரு. G. குழந்தைராஜ் அவர்கள் தலைமையில் திருப்பலி நடைபெற்றது. மறைமாவட்ட பொதுநிலையினர் பணிக்குழுவின் செயலர் திரு.அந்தோணி வியாகப்பன் அவர்கள் நன்றியுரை கூற, கருத்தரங்கம் இனிதே நிறைவு பெற்றது.

இக்கருத்தரங்கிற்கான மேடை, ஒலி - ஒளி அமைப்பு, இருக்கை ஏற்பாடு, உணவு ஏற்பாடு ஆகியவற்றை திட்டமிட்டு மிகவும் சிறப்பான முறையில் செய்து கொடுத்த தென்காசி மறைவட்ட அதிபர் அருள்முனைவர்.P.போஸ்கோ குணசீலன் அவர்களுக்கும், பங்கு மக்களை உற்சாகப்படுத்தி அனுப்பி வைத்த தென்காசி மறைவட்டத்திலுள்ள அனைத்து பங்குத் தந்தையருக்கும், தென்காசி பங்கின் உதவி பங்குத் தந்தை அவர்களுக்கும், கருத்தரங்கிற்கான முன்னேற்பாடுகளை செய்திருந்த யூபிலி-2025 குழுவினருக்கும் சிறப்பான நன்றிகள்.

அருட்பணி.அ.பீற்றர்

ஒருங்கிணைப்பாளர்

யூபிலி-2025 குழு

## அன்பிய பணிக்குழு

### 2024 அக்டோபர் பணியறிக்கை

தயாரிப்புக் கூட்டம்

அம்பாசமுத்திரம் மறைவட்ட அளவில் 20.10.2024 ஞாயிறு மாலை 3.30 மணிக்கு யூபிலி- 2025 ஐ முன்னிட்டு அன்பிய பங்கு தொடர்பாளர்களுக்கான சிறப்புக் கூட்டம் அம்பை மறைவட்ட அதிபர் அருட்பணி. அருள் அந்தோணி அவர்களின் வழிகாட்டுதலின்படி கல்லிடைகுறிச்சி தூய அந்தோணியார் திருத்தலத்தில் வைத்து நடைபெற்றது. இக்கூட்டத்தில் 10.11.2024 ஞாயிறு அன்று அருளகம் பங்கு வளாகத்தில் வைத்து, நடைபெற இருக்கும் ஒரு நாள் சிறப்புக் கருத்தரங்கு குறித்து கலந்துரையாடல் நிகழ்த்தப்பட்டது. மறைவட்ட அளவில் எல்லா பங்குகளிலிருந்தும் அதிகமான இறைமக்கள் கலந்து கொண்டு பயன்பெற வலியுறுத்தப்பட்டது. இக்கூட்டத்தில் 21 அன்பிய பங்கு தொடர்பாளர்கள் கலந்து கொண்டனர்.

அன்பியங்கள் சந்திப்பு

கோவில்பட்டி மறைவட்டம், நாலாட்டின்புத்தூர் பங்கில், 24.10.2024 வியாழன், 25.10.2024 வெள்ளி ஆகிய நாட்களில் அனைத்து அன்பியங்களும் சந்திக்கப்பட்டன. அன்பிய கூட்டங்கள் சிறப்பாக நடத்துதல், அன்பியங்களில் அன்பிய குடும்பத்தார் பங்கேற்பு மற்றும் அன்பிய பொறுப்பாளர்களின் சிறப்பான கடமைகள் குறித்து எடுத்துக் கூறப்பட்டன. அன்பியங்கள் சிறப்பாக நடைபெற வழிகாட்டுதல் வழங்கப்பட்டன.

அன்பியங்கள் சந்திப்பில் உடனிருந்து அனைத்து ஏற்பாடுகளையும் மிக சிறப்பாக செய்திருந்த நாலாட்டின்புத்தூர் பங்குத் தந்தை அருட்பணி.ஸ்டீபன் அவர்கட்கும், உதவி பங்குத் தந்தை அருட்பணி.நவீன் அவர்கட்கும், இதில் கலந்து கொண்ட அன்பிய ஒருங்கிணைப்பாளர் திரு.ஜான் இருதயராஜ், பொதுநிலையினர் பணிக்குழுவின் செயலர் திரு.அந்தோனி வியாகப்பன், ஓய்வு பெற்ற தாசில்தார் திரு.அந்தோனிசாமி மற்றும் களப்பணியாளர் அருட்சகோ.மோட்ச பெர்தினாந்து ஆகியோருக்கும் நன்றி.

அ.பீற்றர்

செயலர்.

## ஆயரின் நல நிதிகள்

**அக்டோபர் - 2024**

| குருமாணவர் நிதி | |
|---|---|
| இறையழைத்தல் பணிக்குழு, காமநாயக்கன்பட்டி | 10,000.00 |
| L. சேவியர் ராஜன், டவுண் | 5,000.00 |
| FSJ அருட்சகோதரிகள், டவுண் | 5,000.00 |
| 9ஆம் வகுப்பு உறுதிப்பூசுதல் மாணவர்கள், காமநாயக்கன்பட்டி | 3,572.00 |
| CTC Sisters, Kamanayakkanpatti | 2,000.00 |
| திருமதி. மரிய செல்வமேரி | 1,000.00 |
| பீடச்சிறுவர்கள், காமநாயக்கன்பட்டி | 810.00 |
| திருமதி. எலிசபெத் பிலிப் | 500.00 |
| மொத்த இருப்புத்தொகை | 27,882.00 |
| இம்மாதம் வழங்கியது | **27,882.00** |
| **ஏழை மாணவர் கல்வி நிதி** | |
| வின்செண்ட் தே பவுல் சபை, காமநாயக்கன்பட்டி | 5,000.00 |
| திருமதி. லீமா ராபர்ட், ஆசிரியை, இருதய நகர் | 5,000.00 |
| 10ஆம் வகுப்பு உறுதிப்பூசுதல் மாணவர்கள், காமநாயக்கன்பட்டி | 3,770.00 |
| இறைமக்கள், எட்டுநாயக்கன்பட்டி | 2,811.00 |
| புனித செசிலியா பாடகற்குழு, காமநாயக்கன்பட்டி | 500.00 |
| அருள் ஞான ஜோசப் ஜார்ஜ், வெள்ளாளன்குளம், டவுண் | 500.00 |

| | |
|---|---|
| முன் கையிருப்பு | 4,24,831.00 |
| மொத்தக் கையிருப்பு | 4,42,412.00 |
| இம்மாதம் வழங்கியது | 60,000.00 |
| மொத்த இருப்புத்தொகை | **3,82,412.00** |
| **குடும்ப நல நிதி** | |
| இயேசுவின் திரு இருதய பரிகார சபை, காமநாயக்கன்பட்டி | 3,000.00 |
| 11ஆம் வகுப்பு உறுதிப்பூசுதல் மாணவர்கள், காமநாயக்கன்பட்டி | 2,731.00 |
| முன் கையிருப்பு | 5,99,416.00 |
| மொத்த இருப்புத்தொகை | **6,05,147.00** |
| **மருத்துவ நல நிதி** | |
| இறைமக்கள், குருவிநத்தம் | 16,702.00 |
| மரியாயின் சேனை, காமநாயக்கன்பட்டி பங்கு | 5,650.00 |
| து. ஜான் பால், டவுண் | 5,000.00 |
| லூர்து அன்னை அன்பியம், தென்காசி | 1,000.00 |
| செங்கோல் அன்னை அன்பியம், செங்கோல் நகர் | 1,000.00 |
| நம்பிக்கை அன்பியம், தென்காசி | 1,000.00 |
| இறைமக்கள், தென்காசி | 701.00 |
| செபமாலை மாதா சபை, காமநாயக்கன்பட்டி | 500.00 |
| பாத்திமா அன்னை அன்பியம், தென்காசி | 500.00 |
| அந்தோனியார் அன்பியம், தென்காசி | 500.00 |
| ரபேல் அன்பியம், தென்காசி | 500.00 |
| மிக்கேல் அன்பியம், தென்காசி | 500.00 |
| வேளாங்கண்ணி அன்பியம், குத்துக்கல்வலசை | 500.00 |
| பரிவு அன்பியம், தென்காசி | 500.00 |
| பேதுரு அன்பியம், குத்துக்கல்வலசை | 500.00 |
| அன்னை தெரசா அன்பியம், வேட்டைக்காரன்குளம் | 500.00 |
| கனிவு அன்பியம், தென்காசி | 500.00 |
| அமைதி அன்பியம், தென்காசி | 500.00 |
| அ. அந்தோனி விவியன், பொறுமை அன்பியம், தென்காசி | 500.00 |
| ஆரோக்கிய அன்னை அன்பியம், தென்காசி | 500.00 |
| மகிழ்ச்சி அன்பியம், தென்காசி | 500.00 |
| முன் கையிருப்பு | 83,943.00 |

| | |
|---|---|
| மொத்தக் கையிருப்பு | 1,21,996.00 |
| இம்மாதம் வழங்கியது | 9,000.00 |
| மொத்த இருப்புத்தொகை | **1,12,996.00** |
| **நற்செய்திப் பணி நிதி** | |
| அன்பியங்கள், காமநாயக்கன்பட்டி பங்கு | 20,461.00 |
| 12ஆம் வகுப்பு உறுதிப்பூசுதல் மாணவர்கள், காமநாயக்கன்பட்டி | 3,142.00 |
| விண்ணவர் செபக்குழு, காமநாயக்கன்பட்டி | 2,510.00 |
| இறைமக்கள், சால்நாயக்கன்பட்டி | 2,301.00 |
| திருமதி. சந்திரா, காந்தி நகர் | 2,000.00 |
| இறைமக்கள், ஈராச்சி | 1,300.00 |
| இறைமக்கள், இலந்தை குளம், சிங்கம்பாறை பங்கு | 500.00 |
| முன் கையிருப்பு | 1,77,535.00 |
| மொத்த இருப்புத்தொகை | **2,09,749.00** |
| **விவிலிய நிதி** | |
| இறைமக்கள், செவல்பட்டி | 5,883.00 |
| மறைக்கல்வி மன்றம், காமநாயக்கன்பட்டி பங்கு | 2,250.00 |
| மாதா இளைஞர் நற்பணி மன்றம், காமநாயக்கன்பட்டி | 1,000.00 |
| தூய அமலோற்பவ மாதா பெண்கள் இயக்கம், காமநாயக்கன்பட்டி | 1,000.00 |
| முன் கையிருப்பு | 1,48,487.00 |
| மொத்த இருப்புத்தொகை | **1,58,620.00** |
| **மறைமாவட்ட சிறப்பு நிதி** | |
| திருப்பலி வழியாக | 85,000.00 |
| ஊர் பொறுப்பாளர்கள், காமநாயக்கன்பட்டி | 5,000.00 |
| R. பாண்டிய ராஜன் - M. ஜோஸ்பின், டவுண் | 5,000.00 |
| ஆசிரியர்கள், புனித அலாய்சியஸ் உயர்நிலைப்பள்ளி, காமநாயக்கன்பட்டி | 4,500.00 |
| பங்குப் பேரவையினர், காமநாயக்கன்பட்டி | 4,100.00 |
| உறுதிப்பூசுதல் பெற்ற இளைஞர் இளம்பெண்கள், காமநாயக்கன்பட்டி | 3,855.00 |
| Servite Sisters, Kamanayakkanpatti | 3,000.00 |
| ஆசிரியர்கள், புனித தெரசாள் துவக்கப் பள்ளி, காமநாயக்கன்பட்டி | 2,500.00 |
| ஆசிரியர்கள், புனித அலாய்சியஸ் துவக்கப்பள்ளி, காமநாயக்கன்பட்டி | 2,000.00 |
| ஆசிரியர்கள், புனித அந்தோனியார் உப பள்ளி, செவல்பட்டி | 1,200.00 |

## Homage paid to Rt Rev. Irudayaraj, D.D., D.C.L
18.10.2024






## Pastoral Visit – Kamanayakkanpatti
19.10.2024





**The Newly Elected General Administrative Team of**
**THE INSTITUTE OF THE BROTHERS OF THE SACRED HEART OF JESUS**
**Palayamkottai**



**Rev. Br. A. Victordass SHJ**
Superior General



**Rev. Br. D. Benedict SHJ**
Asst. Superior General



**Rev. Br. D. Dennis Michael SHJ**
Secretary General



**Rev. Br. J. Raymond SHJ**
Councillor



**Rev. Br. C. Sunil Benjamin SHJ**
Councillor



**Rev. Albert Xaviour SHJ**
Procurator General

*Congratulations dear Brothers*

Wishing you abundant blessings in this new role.

**For Private Circulation only**
e-mail : chancellor@palaymkottaidiocese.org
bishopsecretaryplk@gmail.com
Web : www.palayamkottaidiocese.org

This document was created with the Win2PDF “Print to PDF” printer available at

https://www.win2pdf.com

This version of Win2PDF 10 is for evaluation and non-commercial use only.
Visit https://www.win2pdf.com/trial/ for a 30 day trial license.

This page will not be added after purchasing Win2PDF.

https://www.win2pdf.com/purchase/